TAMIL NADU LEGISLATURE LIBRARY
30 சன 1979
MADRAS

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட் கிழமை, 1978 செப்டம்பர் 11

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள் — விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

அண்ணா சிலை அலங்காரம்

*வினா எண் 126—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அண்ணா பிறந்த நாள் விழாவின் போது அண்ணாசாலையிலுள்ள அறிஞர் அண்ணா சிலை தமிழக அரசின் செலவில் அலங்காரம் செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஏற்பட்ட செலவு என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் மேடை அலங்காரத்திற்காக ரூ. 2,200-ம் மின் அலங்காரத்திற்காக ரூ. 6,074-ம் ஆக மொத்தம் ரூ. 8,274 செலவிடப்பட்டது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய 70-வது பிறந்தநாள் விழாவும் அண்மையிலே நடைபெற இருக்கிறது. எனவே, நமது அரசு அந்தப் பெரியவர்கள் இருவருடைய சிலைகளும்—தமிழகத்திலே உள்ளவை அரசு பராமரிப்பிலே உள்ளன; அதைப் போலவே ஸ்தல ஸ்தாபனங்களுக் குட்பட்டுள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சிலைகளுக்கும் இந்த நூற்றாண்டு விழாவை யொட்டி, பல பகுதிகளிலும் அலங்காரங்கள் செய்திட அரசு ஆவன செய்திட முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 11

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, அண்ணா பிறந்த நாள் விழாவின்போது அண்ணா சாலையிலுள்ள அண்ணா சிலை தமிழக அரசின் செலவில் அலங்காரம் செய்யப்பட்டதா என்பது மூலக் கேள்வி. ஆதலால், தனிக் கேள்வி போடவும்.

திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவரவர்களே, இதுபோல் வருகின்ற அக்டோபர் 2-ஆம் தேதி தேசத் தந்தை காந்தியடிகளுடைய பிறந்தநாள் விழா வருகின்றது. இதற்கு முன்னாலே பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய பிறந்தநாள் விழாவும் வந்திருக்கிறது. அவைகளுக்கெல்லாம் அரசு செலவில் அலங்காரம் செய்யப்பட்டதா? இனிமேல் செலவு செய்யப்படுமா? அவ்வாறு செலவு செய்யப்பட்டால், செலவுத் தொகை எவ்வளவு என்பதைத் தெரிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, நடப்பு ஆண்டுகளில் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு அண்ணா சாலையிலுள்ள அண்ணாசிலைக்கும், காந்தி ஜயந்தியை முன்னிட்டு மெரினாவில் உள்ள காந்தி சிலைக்கும் மூன்று நாட்களுக்கு ஒவ்வொரு முறையும் அதாவது செப்டம்பர் 14-லிருந்து 16 வரையிலும் அக்டோபர் 1-லிருந்து 3-வரையிலும் மின்விளக்கு அலங்காரம் செய்ய ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ரூ. 5,000-க்கு உட்பட்டு செலவு செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய, அண்ணா அவர்களுடைய சிலைகளை அலங்காரம் செய்வது வரவேற்கத்தக்கது. தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவையொட்டி, சிறையில் இருக்கும் மரண தண்டனை பெற்றிருக்கிற கைதிகளின் மரண தண்டனையைக் குறைத்து, ஆயுள் தண்டனையாக ஆக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகின்றேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருந்தலைவர் என்பதோடு முன்னாள் முதலமைச்சர் என்கின்ற அடிப்படையிலே அவருடைய சிலையை அலங்காரம் செய்வது வரவேற்கத்தக்கது. அதேபோல் முன்னாள் முதலமைச்சர்கள் பி. எஸ். குமாரசாமி ராஜா, ராஜாஜி போன்றவர்களுடைய சிலைகளையும் அரசாங்கச் செலவிலே—எங்கே இருந்தாலும்—அலங்காரம் செய்ய அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, அவர்களுடைய விழாக்களையும் அரசே ஏற்று நடந்த முயற்சி எடுத்தால், இந்தச் செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளும்.

Allotment of houses for Legislators.

* Q. No. 127 THIRU—K. SUPPU : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) whether it is a fact that the houses available for Legislators within the Government Estate have been allotted to Government Officials ; and

(b) if so, the reasons therefor ?

திரு. எம். வின்சென்ட் : (அமைச்சரின் பேரவைச் செயலர்)

(அ) இல்லை.

(ஆ) பிரச்சினை எழவில்லை.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட வீடுகள் இப்பொழுது அரசு அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரே வித்தியாசம் இப்பொழுது எதிர்க் கட்சியிலே நாங்கள் இருக்கிறோம். எங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகள் எமர்ஜன்சியின்போது அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் இல்லையென்று சொல்கிறார்கள். கிச்சன் பிளாக்கில் வி-2 எண்ணுள்ள வீடு அதிகாரிக்கு ஒதுக்கப்பட்டிருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? ஆகவே, மறுபடியும் லெஜிஸ்லேட்டர்களுக்கு ஒதுக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, சென்னை அண்ணா சாலையிலுள்ள அரசினர் தோட்டத்தில் 231 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 155 குடியிருப்புகள் கடைநிலை ஊழியருக்கும், ஒரு குடியிருப்பு சபாநாயகருக்கும் உரியவை. எஞ்சியுள்ள 75 குடியிருப்புகளில், 10 குடியிருப்புகள் சட்டமன்றப் பேரவை/மேலவை உறுப்பினர்களுக்கென அரசாணை (நிலை) எண். 1634, பொதுப்பணித் துறை, நாள் 27—5—1959-ல் ஒதுக்கப்பட்டுள்ளன.

சட்டமன்ற மேலவை/பேரவை உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்பட்ட 10 குடியிருப்புகளும் கீழ்க்கண்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா, மாண்புமிகு திரு. ஏ. ஆர். மாரிமுத்து, மாண்புமிகு திரு. மார்க்கபந்து மாண்புமிகு திரு. ஏ. திராவிடமணி. மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன், மாண்புமிகு திரு. துரை கோவிந்தராசன், மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்,